**ආයතනයේ නම : වන සංරක්ෂණ දෙපාර්තමේන්තුව**

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගණු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

**நிறுவனத்தின் பெயர் : வனப் பாதுகாப்புத் திணைக்களம்**

பாராளுமன்றத்தின் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பில் நிலையியற் கட்டளை 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புகளையும் எடுத்த நடவடிக்கைகளையும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

**Name of the institution: Department of Forest Conservation**

Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the committee on public Accounts in terms of Standing Order NO. 119(4)

பாராளுமன்ற கூற்றுத் தொடர் இலக்கம் : 79

நிறுவனத்தின் பெயர் : வனப் பாதுகாப்புத் திணைக்களம்

| 2022 ஆம் நிதியாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதி மற்றும் முன்னேற்ற மீளாய்வு அறிக்கையில் காணப்படும் குறைபாடுகள் | அதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் . தற்போதைய நிலைமைகள் |
|---|---|
| முதலாவது பகுதி: | |
| 1. வருடாந்த நிதிக் கூற்றுக்கள் குறித்துரைத்த திகதியில் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பவில்லை. | ➢ 2022 ஆம் நிதியாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலும் அதில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டுமென கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டது. அதனடிப்படையில், திருத்தங்களுடன் 2023.05.31ஆந் திகதி நிதிக் கூற்றானது காணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது. 2023 நிதியாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் உரிய திகதியில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது. |
| 2. 2022 திசெம்பர் 13 ஆம் திகதிய இலக்கம் 2022/05 என்ற அரச கணக்குகள் வழிகாட்டியின் 8.1 மற்றும் 8.2இன் பிரகாரம், சிகாஸ் திட்டத்தின் நிலையான சொத்துக்கள் மொடியுல் இற்றைவரைப்படுத்தப்படவில்லை. | ➢ எல்லா நிதியல்லாச் சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்கும், கணக்கு வைப்பதற்கும் அனைத்து உப ∴ கிளை அலுவலக உத்தியோகத்தர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் போதுமான அறிவு ஊழியர்களிடத்தில் இன்மையால், அது தொடர்பில் கலந்துரையாடி, அரச கணக்குகள் திணைக்களத்தின் ஊடாக சொத்துக்களை கணக்கு. வைத்தல் தொடர்பான பயிற்சியொன்றினை 2024.08.15 மற்றும் 16ஆந் திகதிகளில் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில், அனைத்து சொத்துக்களும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைத்தல் செயற்பாட்டினை 2024ஆம் ஆண்டிற்குள் முடிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |
| 3. பொருட் பதிவேட்டு புத்தகம் நாளதுவரையாக பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | ➢ திணைக்களத்தின் அனைத்து பிரிவுகளதும் பொருட் பதிவேடுகளும் இற்றைவரைப்படுத்தப்பட்டு பேணப்படுவதுடன், பிரதான களஞ்சியத்தின் பொருட் பதிவேடும் இற்றைவரைப்படுத்தப்பட்டு பேணப்படுகின்றது. |
| 4. நுகர்வுப் பொருட்பதிவேடு இற்றைவரைப்படுத்தப்பட்டு பேணப்படவில்லை. | ➢ திணைக்களத்தின் அனைத்து பிரிவுகளதும் நுகர்வுப்பொருட் பதிவேடுகளும் இற்றைவரைப்படுத்தப்பட்டு பேணப்படுவதுடன், பிரதான களஞ்சியத்தின் பொருட் பதிவேடும் இற்றைவரைப்படுத்தப்பட்டு பேணப்படுகின்றது. |
| 5. இழப்பு தொடர்பான பதிவேடு நாளது வரையான பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | ➢ திணைக்களத்திற்குரிய அனைத்து நட்டங்களுக்குமுரிய, நட்டப் பதிவேடு பிரதான அலுவலகத்தில் இற்றைவரைப்படுத்தப்பட்டு பேணப்படுகின்றது. |

| | |
|---|---|
| 6. ஆபத்து பதிவேடு இற்றைவரைப்படுத்தப்பட்டு பேணப்படவில்லை. | ➢ 2022 ஆம் அண்டு தொடக்கம் ஆபத்து பதிவேடு இற்றைவரைப்படுத்தப்பட்டு பேணப்படுகின்றது. |
| 7. அங்கத்தவர் கடன் பதிவேடு (ஊஊ10) இற்றைவரைப்படுத்தப்பட்டு பேணப்படவில்லை. | ➢ திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு முற்பண பீ கணக்கின் கீழ் கடன்களை வழங்கும் செயற்பாடானது பிரதான அலுவலகத்திலும் வலய அலுவலகங்களிலும் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்குரிய அங்கத்துவ கடன் பதிவேடு இற்றைவரைப்படுத்தப்பட்டு பேணப்படுகின்றது. |
| 8. கணக்காய்வாளர் தலைமையதிபதியால் சமர்ப்பிக்கப்படுகின்ற அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளிக்கப்படவில்லை. | ➢ அநேகமான கணக்காய்வு ஐயவினாக்களும் வலயக் காரியாலயங்கள் மற்றும் மாட்ட வன அலுவலகங்களுக்குரியது என்பதால் அவை தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதில் காலம் எடுக்கின்றது. அவை தொடர்பில் ஒரு மாதத்திற்குள் பதில் அளித்தல் கடினமான செய்றபாடாகும். எனினும் இயலுமானவரையில் குறைந்த காலப்பகுதியுள் கணக்காய்வு ஐயவினாக்களுக்கான விடைகள் அளிக்கப்பட்டுள்ளன. |
| 9. உள்ளக கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளிக்கப்படவில்லை. | ➢ இயலுமானவரையில் குறைந்த காலப்பகுதியுள் கணக்காய்வு ஐயவினாக்களுக்கான விடைகள் அளிக்கப்பட்டுள்ளன. |
| 10. 2020.08.28. ஆந் திகதிய அ.நி.சு.1 ஆம் பகுதியின் 11.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியுள் நி.பி.756(6) ஈன் பிரகாரம் பொருட்சுற்றாய்வு மேற்கொள்ளப்பட்டு உரிய அறிக்கைகள் உரிய திகதியில் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு அனுப்பி வைக்கப்படவில்லை. | ➢ 2022 ஆம் ஆண்டில் காணப்பட்ட எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக உரிய நேரத்தில் சுற்றாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியவில்லை. எனினும் சுற்றாய்வு நடவடிக்கைகள் முடிவடைந்தவுடன் உரிய அறிக்கை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ளது. எதிர்வரும் காலப்பகுதியில் 01/2020 அ.நி.சுற்றறிக்கையின்படி உரிய திகதியில் அனைத்து நடவடிக்கைகளையும் பூர்த்தி செய்து அறிக்கைகளை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| 11. வருடாந்த சுற்றாய்வில் அறிக்கை செய்யப்பட்ட மேலதிகம் குறைவு தொடர்பில் எந்தவித நடவடிக்கையும் அறிக்கை செய்யப்படவில்லை. | ➢ 01/2020 அ.நி.சுற்றறிக்கையின்படி உரிய நேரத்தில் சுற்றாய்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு வருடாந்த சுற்றாய்வில் இனங்காணப்பட்ட மேலதிகம், குறைவு தொடர்பான சிபாரிசுகளையும் ஏனைய சிபாரிசுகளையும் உரிய காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |
| 12. அனைத்து வாகனங்களதும் உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் கைவசம் இல்லை. | ➢ வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமல்லாத வாகனங்களது உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| 13. அனைத்து வாகனங்களிலும் அரச இலச்சினை பொறிக்கப்படவில்லை. | ➢ அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

| | |
|---|---|
| 14. வாகனமொன்று அகற்றப்பட்ட நிலையில் இருந்தும் 08 மாதங்களுக்கு குறைந்த காலப்பகுதிக்குள் அகற்றப்படாமல் காணப்பட்டமை. | ➢ கடந்த பல வருடங்களாக எந்தவொரு வாகனமும் அகற்றப்படவில்லை என்பதுடன், 2022ஆம் ஆண்டில் அகற்றப்படுவதற்கு அடையாளங்காணப்பட்டிருந்த வாகனங்களுள் 167 வாகனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தன. 2023ஆம் ஆண்டில் 37 முழுமையான வாகனங்களை விற்பதற்கு திறந்த விலைமனு கோரப்பட்டிருந்தது. அவற்றுள் அதிக விலைமனுக்களை சமர்ப்பித்தவர்களுக்கு 12 வாகனங்கள் விற்பனை செய்யப்பட்டன. மீதமுள்ள வாகனங்கள் முழுமையான வாகனங்கள் மற்றும் துண்டு கழிவுகளாக அகற்றப்படவேண்டியுள்ளதால், அவற்றிற்கு திறந்த கேள்வி மனுக்கள் கோரப்படவுள்ளன. |
| 15. அரச வாகன விபத்துக்கள் தொடர்பில் நி.பி.அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ➢ திணைக்களத்திற்குரிய வாகனங்கள் தொடர்பில் நி.பி.அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| 16. வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | ➢ சிகாஸ் நிகழ்ச்சியை இற்றைவரைப்படுத்துவதில் எழுந்த பிரச்சினை காரணமாக முதல் காலாண்டில் வங்கிக் கணக்கிணக்கக்கூற்று தயாரிப்பதில் தாமதம் நிகழ்ந்தது. பின்னர் உரிய திகதியில் அனுப்பப்பட்டது. 2024ஆம் ஆண்டு தொடக்கம் பிரதேச அலுவலகங்களில் அவை தயாரிக்கப்பட்ட மின்னஞ்சல் ஊடாக கணக்காய்விற்கு அனுப்புவதற்கு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. |
| 17. மீளாய்வு ஆண்டில் அல்லது அதற்கு முன்னை வருடங்கள் தொடக்கம் காணப்பட்ட செயற்படாத கணக்குகள் தீர்க்கப்படவில்லை. | ➢ செயற்படாத வங்கிக் கணக்குகளை மூடி விடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. |
| 18. வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுகளில் வெளிப்பட்ட இணக்கம் செய்யப்படவேண்டியவைகள் தொடர்பில் நி.பி.அடிப்படையில் தீர்க்கப்படவில்லை. | ➢ உரிய காலத்தில் மேற்கொள்ளப்படவில்லையாயினும் அவை அனைத்தும் தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளது. 2024ஆம் ஆண்டு தொடக்கம் அவை உரிய காலத்தில் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 19. ஒரு வருடத்திற்கு மேல் வருகின்ற நிலுவை கடன் மீதிகள் காணப்படுகின்றமை. | ➢ முற்பண பீ கணக்கின் நிலுவை கடன் மீதி, உரிய கடன்பட்டவர்களிடமிருந்து∴ பிணையாளர்களிடமிருந்து ∴ ஓய்வூதியம் அல்லது மரணப் பணிக்கொடையிலிருந்து அறிவிடுவதற்கு இயலுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டள்ளது. அவ்வாறு அறவிட முடியாது போன சந்தர்ப்பத்தில் அவர்களுக்கெதிராக வழக்குத் தொடருவதற்கு சட்டமா அதிபரின் ஆலோசனைகள் கோரப்பட்டுள்ளது. |
| 20. பொது வைப்புக் கணக்கில் காலங்கடந்த வைப்புத் தொடர்பில் நி.பி.571இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ➢ பொது வைப்புக் கணக்கில் அடையாளங்காணப்பட்ட, உரிமை கோரப்படாத 02 வருடங்களுக்கு மேற்பட்ட சாதாரண பிணை வைப்புக்கள் 2023ஆம் ஆண்டில் அரச வருமானத்தில் வரவு வைக்கப்பட்டுள்ளது. காணிகளைக் கோருவதற்கான பிணை வைப்பானது வைப்பிடப்பட்ட தினத்திலிருந்து 10 வருடம் பூர்த்தியானதன் பின்னரும், கருத்திட்ட நிதிய வைப்பானது கருத்திட்டம் முடிவடைந்து 02 |

| | |
|---|---|
| | வருடத்திற்குள் உரிமை கோரப்படாது விட்டாலும், அரச வருமானத்தில் வரவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறே 2024ஆம் ஆண்டு தொடக்கம் ஒவ்வொரு அரையாண்டு முடிவின்போதும் காலங்கடந்த அனைத்து வைப்புக்கள் தொடர்பிலும் அட்டவணைகள் தயாரிக்கப்படுவதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |
| 21. நி.பி.371இன் பிரகாரம் வழங்கப்பட்ட நிமித்த உப கட்டுநிதியானது உரிய செயற்பாடுகள் முடிவடைந்து ஒரு மாத காலப்பகுதிக்குள் தீர்க்கப்படவில்லை. | ➢ திணைக்களத்திற்குக் கீழ் உப அலுவலகங்கள் ∴ கிளை அலுவலகங்கள் அதிகளவில் காணப்படுவதால், அவர்களுக்கு வழங்கப்படுகின்ற நிமித்த உப கட்டுநிதியானது உரிய செயற்பாடுகள் முடிவடைந்து ஒரு மாத காலப்பகுதிக்குள் தீர்க்கப்பட முடியாமல் உள்ளது. எனினும் இயலுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் குறைந்த காலப்பகுதியுள் தீர்க்கப்பட்டுள்ளது. ஏதேனும் சந்தர்ப்பங்களில் தீர்க்க முடியாமற்போன கட்டுநிதிகள் டிசம்பர் 31இற்கு முன்னர் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2024ஆம் ஆண்டு தொடக்கம் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் நிமித்த உபகட்டுநிதியை நி.பி.371இன் அடிப்படையில் தீர்ப்பதற்கும் அது தொடர்பில் பின்னூட்டல் செய்வதற்கும் உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| 22. நி.பி.371இற்கு புறம்பாக நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டுள்ளது. | ➢ 2022 ஆம் நிதியாண்டில் நி.பி.371 எல்லையை மீறி நிமித்த உப கட்டுநிதி வழங்கப்படவில்லை. |

இரண்டாம் பகுதி :

| | |
|---|---|
| 1. நிறுவனத்தில் பேணிச் செல்லப்படுகின்ற இணையத்தளத்தின் ஊடாக பொதுமக்கள் முறைப்பாடுகளை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்படவில்லை. | ➢ தற்போது காணப்படுகின்ற இணையத்தளமானது பழைய முறையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதில் புதிய மாற்றங்களை ஏற்படுத்துதல் கடினமாகும். எனவே இணையத்தளமொன்றை உருவாக்கியதன் பின்னர் முறைப்பாடுகளுக்கென புதிய பக்கமொன்றை இணைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| 2. நிறுவனத்தின் கணக்கு தொடர்பான கணக்காய்வு கருத்தானது பொறுப்புத் துறப்பு மட்டம் அல்லது பாதகமான மட்டத்தில் காணப்பட்டது. | ➢ கணக்கு தொடர்பான கணக்காய்வு கருத்தினை சாதகமான மட்டத்திற்கு கொண்டு வருவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |

| | | |
|---|---|---|
| ஏ.ஏ.டீ.டீ.டீ.அலஹகோன்<br>பிரதான கணக்காளர்<br>வனப் பாதுகாப்புத் திணைக்களம். | ஈ.ஏ.பீ.என்.எதிரிசிங்க<br>வனப் பாதுகாப்பாளர் நாயகம்<br>வனப் பாதுகாப்புத் திணைக்களம். | குணதாச சமரசிங்க<br>செயலாளர்<br>வன சீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு |
| A.A.D.D.D. Alahakoon<br>Chief Accountant<br>Department Of Forest Conservation,<br>Sampathpaya, Rajamalwatta Road,<br>Battaramulla. | E. A. P. N. EDIRISINGHE<br>Conservator General of Forests<br>Department of Forest Conservation<br>"Sampathpaya" Rajamalwatta Road<br>Battaramulla | Gunadasa Samarasinghe<br>Secretary<br>Ministry of Wildlife and Forest<br>Resources Conservation |